வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி : 07.10.2023 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

ஆசிய விளையாட்டு போட்டிகளில் 100 பதக்கங்களை வென்ற இந்திய அணிக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி பேராசிரியர் எம்.எஸ் சுவாமிநாதனின் சாதனைகள் குறித்து இன்று தமது சமுக வலைதள பதிவில் தமது எண்ணங்களை பகிர்ந்துள்ளார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுடெல்லியில் இன்று 52 ஆவது ஜி.எஸ்டி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது.

தான்சானியா அதிபர் சாமியா சுலுஹு ஹசன் நாளை 2 நாள் பயணமாக இந்தியா வர உள்ளார்.

*ஆசிய விளையாட்டு போட்டி* (10)

சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வரும் 19 ஆவது ஆசிய விளையாட்டு போட்டிகளில் 100 பதக்கங்களை வென்ற இந்திய அணிக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா முதன் முறையாக 100 பதக்கங்களை வென்று சரித்திரம் படைத்துள்ளது பாராட்டத் தக்கது என்றும், இந்த மைல் கல்லை எட்டுவதற்கு வீரர்களின் அளப்பறிய அர்ப்பணிப்பு, திறமை ஆகியவை பாராட்டுக்குறியது என்றும் தெரிவித்துள்ளார். அவர்களின் இந்த அர்ப்பணிப்புக்கு தேசம் மிகவும் பெருமை கொள்கிறது என்றும் குடியரசு தலைவர் தெரிவித்துள்ளார்.

*ஆசிய விளையாட்டு பிரதமர்* (13)

ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்திய மகளிர் கபடி அணிக்கு தங்க பதக்கம் கிடைத்துள்ளது. இதன் மூலம் இந்தியா ஆசிய விளையாட்டு போட்டிகளில் 100 பதக்கங்களை வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளது. இதனை ஒட்டி, இந்திய மகளிர் கபடி அணிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் சமுக ஊடகப் பதிவில் விடுத்துள்ள செய்தியில், ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியாவிற்கு இது ஒரு வரலாற்று தருணம் என்றும், இந்த வெற்றி நமது விளையாட்டு வீரர்களின் அசைக்க முடியாத மனப்பான்மைக்கு சான்றாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அவர்களின் எதிர்கால

முயற்சிக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். வரும் செவ்வாய் கிழமை தங்கம் வென்ற விளையாட்டு வீரர்களுடன் தாம் உரையாட ஆவலுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

*ஆசிய விளையாட்டு அனுராக் சிங் தாக்கூர்* (15)

ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா 100 ஆவது பதக்கத்தை எட்டியதற்கு, அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு அனுராக் சிங் தாக்கூர் வாழ்த்து தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சாதனை படைத்த இந்திய விளையாட்டு வீரர்கள் எதிர்கால விளையாட்டு வீரர்களுக்கு ஒரு உத்வேகம் என்று கூறினார். 72 ஆண்டுகளில் ஆசிய விளையாட்டு வரலாற்றில் இந்திய விளையாட்டு வீரர்கள் பல உலக சாதனைகளை முறியடித்து, புதிய ஆசிய சாதனைகளை படைத்துள்ளனர் என்றும் அவர் கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையும், விளையாட்டு வீரர்களுக்கு அவர் அளித்துள்ள வசதிகளும் வீரர்களின் கடின உழைப்பும், உறுதியும் இந்தியா 100 பதக்கங்களை வெல்வதற்கு காரணமாக அமைந்துள்ளது என்றும் திரு அனுராக் சிங் தாக்கூர் தெரிவித்துள்ளார். வரலாற்றில் இடம் பிடித்த அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் தமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

*பிரதமர் மீட்டிங்* (9)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் கடந்த சுதந்திர தினத்தன்று செங்கோட்டையில அவர் ஆற்றிய உரை வெளியிடப்பட்ட அறிவிப்புகளை மறு ஆய்வு செய்வதற்கான முக்கிய கூட்டம் ஒன்றை நடத்தி உள்ளார். ஏழை மற்றும் நடுத்தர வர்க்க வீடுகளுக்கு மலிவு விலையில் கடன் வழங்குவதை உறுதி செய்வது குறித்தும், அதனை அமல்படுத்துவது குறித்தும் அவர் ஆய்வு மேற்கொண்டார். பிரதமரின் சுதந்திர தின உரையில், வீடுகளுக்கு சூரிய ஒளி மின்சாரத்தை உறுதி செய்வது பற்றி குறிப்பிட்டிருந்தார். இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் அவர் ஆய்வு செய்தார்.

*எம்.எஸ் சுவாமிநாதன் 1* (16)

பிரதமர் திரு நரேந்திர மோடி புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி பேராசிரியர் எம்.எஸ் சுவாமிநாதனின் சாதனைகள் குறித்து இன்று தமது சமுக வலைதள பதிவில் தமது எண்ணங்களை பகிர்ந்துள்ளார். தேசம் ஒரு தொலைநோக்கு பார்வையாளரை இழந்து விட்டது என்றும், அவருடைய பங்களிப்பு எப்போதும் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். 1990 களின் முற்பகுதியில் இந்தியா பஞ்சத்தின் அச்சுறுத்தும் நிழல்களுடன் போராடிக் கொண்டிருந்த வேளையில் சாமிநாதனின் அர்ப்பணிப்பு மற்றும் தொலைநோக்கு விவசாய அர்ப்பணிப்பு புதிய சகாப்தத்திற்கு வழிவகுத்தது என்றும் தெரிவித்துள்ளார்.

வேளாண் மற்றும் கோதுமை வளர்ப்பு போன்ற குறிப்பிட்ட துறைகளில் பேராசிரியர் சுவாமிநாதனின் முன்னோடிப் பணி கோதுமை உற்பத்தியில் குறிப்பிடதக்க அதிகரிப்பிற்கு வழிவகுத்தது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். இந்த மகத்தான சாதனை அவருக்கு இந்திய பசுமை புரட்சியின் தந்தை என்ற தகுதியான பட்டத்தை பெற்றுத் தந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

*எம்.எஸ் சுவாமிநாதன் 2* (13)

பசுமை புரட்சி தொடங்கி 50 ஆண்டுகளுக்கு பிறகு இந்திய விவசாயம் மிகவும் நவீனமயமாகவும், முற்போக்கானதாகவும் மாறியுள்ளது. ஆனால், பேராசிரியர் எம்.எஸ் சுவாமிநாதன் அமைத்த அடித்தளங்களை நாம் ஒருபோதும் மறக்க முடியாது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

சிறு தானியங்களின் அவசியத்தை இன்று தேசம் பேசினாலும், 1990 ஆம் ஆண்டுகளிலேயே டாக்டர் எம்.எஸ் சுவாமிநாதன் இதற்கான விதைகளை தூவியதாக பிரதமர் சுட்டிக்காட்டி உள்ளார். பேராசிரியருடன் தமது கலந்துரையாடலை நினைவு கூர்ந்த பிரதமர் மண் வள அட்டை திட்டத்திற்கு அவர் அளித்த அரிய ஆலோசனைகளை பெருமையுடன் நினைவு கூர்ந்தார். வேளாண் விஞ்ஞானி என்று மக்கள் டாக்டர் சுவாமிநாதனை அழைத்த போதிலும் உண்மையில் அவர் என்றென்றும் விவசாயிகளின் விஞ்ஞானியாக திகழ்ந்தவர் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

*மீனவர்கள் மீட்பு* (9)

நாகப்பட்டினம் நாவூர் துறைமுகத்தில் இருந்து கடந்த 5 ஆம் தேதி இரவு மீன் பிடிக்க சென்ற 10 மீனவர்கள் விபத்தில் சிக்கி கடலில் படகுடன் தத்தளித்து வந்தனர். மீன்வளத்துறைக்கு படகு குறித்த தகவல் கிடைத்ததும், இந்திய கடலோர காவல் படையினர் சி-432 என்ற கப்பலுடன் சென்று, பால்க் வளைகுடா பகுதியில் இருந்து 10 மீனவர்களை படகுடன் மீட்டனர். படகு மற்றும் பணியாளர்கள் ராமேஸ்வரம் பாம்பன் மீன்பிடி துறைமுகம் அருகே உள்ள மீன்வளத்துறை அதிகாரிகளிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப் பட்டுள்ளதாக, கடலோர காவல் படை விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*தான்சானியா* (8)

தான்சானியா அதிபர் சாமியா சுலுஹு ஹசன் நாளை 2 நாள் பயணமாக இந்தியா வர உள்ளார். அவர் புதுடெல்லியில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளார். வரும் 10 ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் முதலீட்டு மாநாட்டிலும் அவர் பங்கேற்க உள்ளார். அவரது இந்த பயணம் இந்தியா மற்றும் தான்சானியா இடையே வரலாற்று மற்றும் நட்புறவுகளை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மோடி (7)

பிரதமர் திரு நரேந்திர மோடி ஜி 20 நாடுகளின் நாடாளுமன்ற தலைவர்களின் மாநாட்டை வரும் 13 ஆம் தேதி புதுடெல்லியில் தொடங்கி வைக்க உள்ளார். இந்த மாநாடு உலகளாவிய நிர்வாகத்தில் நாடாளுமன்றத்தின் செயல்பாடுகள் மற்றும் ஒரே பூமி-ஒரே குடும்பம்-ஒரே எதிர்காலம் என்ற கருப்பொருளின் அடிப்படையில் நடைபெற உள்ளது. பருவ நிலைமாற்றம், சுகாதாரம், கல்வி, வேளாண்மை, எரிசக்தி போன்ற தலைப்புகளிலும் விவாதங்கள் மாநாட்டில் நடைபெற உள்ளது.

ஜி.எஸ்.டி கூட்டம் 1(19)

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுடெல்லியில் இன்று 52 ஆவது ஜி.எஸ்டி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சவுத்ரி, மாநில மற்றும் யூனியன் பிரதேச நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய-மாநிலங்களின் மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர். கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திருமதி நிர்மலா சீதாராமன், ஜி.எஸ.டி மேல்முறையீடு தீர்ப்பாயம், தினை மற்றும் வெல்லப்பாகு மீதான ஜி.எஸ்.டி தொடர்பான பல முக்கிய முடிவுகளை எடுத்து இருப்பதாகவும் தெரிவித்தார். இதன்படி, கரும்பு விவசாயிகளுக்கு பலன் அளிக்கும் வெல்லப்பாகு மீதான ஜி.எஸ்.டி 28 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். 70 சதவிகித தினை கொண்ட மாவு முன் பேக்கேஜ் செய்யப்பட்ட வடிவத்தில் விற்பனை செய்தால் பூஜ்ய சதவிகித ஜி.எஸ்.டி அளிக்கப்படும் என்றும், அதையே லேபிள் இடப்பட்ட வடிவத்தில் விற்றால் 5 சதவிகித ஜி.எஸ்.டி விதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். சிறு தானிய மாவு உற்பத்தி பொருட்களின் வரியை தற்போதுள்ள 18 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மின் வாகன பேட்டரிகளுக்கான ஜி.எஸ்.டி வரியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

கடற்பயணம் 1(17)

மத்திய மீன் வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா மற்றும் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் ஆகியோர் இணைந்து இன்று காலை ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி மீன்பிடி துறைமுகத்தில் 9 ஆம் கட்ட கடற்பயணத்தை தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபலா மீன்பிடி தொழிலில் தமிழகம் முன்னிலையில் உள்ளது என்றும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மாநிலத்தின் மீன்பிடி துறை முக்கிய பங்காற்றுகிறது என்றும் தெரிவித்துள்ளார். மீனவர்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு அரசு திட்டங்கள் குறித்தும் அமைச்சர் எடுத்துரைத்தார். தொண்டியில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை சமர்பிக்குமாறும்

அவர் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார். மேலும், விண்ணப்பித்த மீனவர்களுக்கு கிசான் க்ரிடிட் கார்ட் வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய மீன்வளத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், கடந்த 6 மாதங்களுக்கு முன்பு குஜராத்தில் தொடங்கிய சாகர் பரிக்ரமா கடல் பயண திட்டம் மகராஷ்டிரா,

கடற்பயணம் 2 (8)

கோவா, கர்நாடகா, கேரள மாநிலங்களை தொடர்ந்து தமிழகத்தில் தற்போது மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ளார். கடலோர மீனவர்களை சந்தித்து மத்திய அரசின் திட்டங்களை அவருடன் கொண்டு செல்ல இது ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி தந்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மீனவர்கள், வணிகர்கள் மற்றும் இதர பங்குதாரர்களுக்கு ஆதரவாக அனைத்து கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மத்திய அரசால் தொடங்கப்பட்ட இத்திட்டம் இம்மாதம் 9 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

ஆசிய விளையாட்டு பேட்மிண்டன் (7)

சீனாவின் ஹாங்சோவில் நடைபெறும் 19 ஆவது ஆசிய விளையாட்டு போட்டியில், இன்று பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் பிரிவில் தங்கம் வென்ற சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டி மற்றும் சிராக் ஷெட்டிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். அவர்களின் ஆட்டம் மைதானத்தை பரவசப்படுத்தி, இந்தியாவிற்கு எப்போதும் பெருமை சேர்க்கிறது என்றும் பிரதமர் தமது சமுக வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

ஆசிய விளையாட்டு போட்டிகளில் 100 பதக்கங்களை வென்ற இந்திய அணிக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி பேராசிரியர் எம்.எஸ் சுவாமிநாதனின் சாதனைகள் குறித்து இன்று தமது சமுக வலைதள பதிவில் தமது எண்ணங்களை பகிர்ந்துள்ளார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுடெல்லியில் இன்று 52 ஆவது ஜி.எஸ்டி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது.

தான்சானியா அதிபர் சாமியா சுலுஹு ஹசன் நாளை 2 நாள் பயணமாக இந்தியா வர உள்ளார்.